நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்க நிலையான ஆய்வு செய்து முறையான அளவுக்குச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, குறும்புக்காரர்கள் எதைச் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் சில நேரங்களில் நிலங்களை விற்பதில் ஏற்படுகின்ற போட்டியின் காரணமாக விலை ஏறுகிறது. அப்படி விலை ஏறும்பொழுது, அதற்குப் பத்திரச் செலவு அதிகம் ஆகிறது. அப்படி அதிகம் ஆனதற்குப் பிறகு மற்றவர்களும் பத்திரம் பதிவு செய்யும்பொழுது அதைப்போல பணம் கட்ட வேண்டுமென்ற முறை இருந்தது. அப்படியெல்லாம் செய்யாமல், சந்தை விலை (Market Value) என்று அதைப்பற்றிப் பார்த்து வாங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வாங்குபவர்களும், விற்பவர்களும் எந்த விலை என்று சொல்லிப் பத்திரம் வாங்குகிறார்களோ அதையே அவர்களால் அதில் எழுதப்படுகிறது. எங்கேயாவது சந்தேகம் ஏற்பட்டால் வருவாய்த் துறைக்கு அதைப்பற்றிச் சொல்லப்படுகிறது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்கள்.

வினா எண். 737—

*திரு. கோ. இளங்கோவன், திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஈரோட்டில் பெரியார் நூற்றாண்டினையொட்டி 17–9–1978, 18–9–1978 ஆகிய நாட்களில் எடுத்த விழாக்களுக்குச் செலவிடப்பட்ட தொகை யாது?

(ஆ) அதுபோது அரசு ஏதேனும் தீர்மானங்கள் நிறைவேற்றியது உண்டா?

(இ) ஆமெனில் அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே,—

(அ) ரூபாய் 4,46,492.

(ஆ) மற்றும் (இ): அரசு தீர்மானமெதுவும் நிறைவேற்றவில்லை. ஆனால் மாண்புமிகு முதல்வரவர்கள் சில கொள்கை அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள்.